மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் ஒன்றியம் திருவாலங்காடு கிராமத்தில் நடைபெற்ற வெடி விபத்தில் உயிரிழந்த திருவாலங்காடு பகுதியைச் சேர்ந்த லெட்சுமணன் என்பவரின் வீட்டிற்கு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேரில் சென்று ஆறுதல் கூறி தமிழ்நாடு முதலமைச்சர் நிவாரண உதவித் தொகை ரூ. 3 லட்சத்திற்கான காசோலையை வழங்கினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், கு.வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பாலமுருகன் மற்றும் பலர் உள்ளனர்.

அரியலூர் மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பொது உறுப்பினர் கூட்டங்கள்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவிப்பு!

அரியலூர், ஆக.28-

அரியலூர் மாவட்டச் செயலாளர்-அமைச்சர் சா.சி.சிவசங்கர் விடுத்துள்ள அறிவுப்பு வருமாறு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அரியலூர் மாவட்டத்தில் ஒன்றிய, நகர பொது உறுப்பினர்கள் கூட்டம்

கீழ்கண்ட நாட்களில் நடைபெறுகிறது. அதுசமயம் மாவட்டத்தில் உள்ள பொது உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுகொள்கிறேன். கூட்டம் நடைபெறும் நாள்

ஒன்றியம் / நகரம்
இடம் விபரம் வருமாறு

28.08.2024 புதன்கிழமை மாலை 05.00 மணி செந்துறை வடக்கு ஏ.வி.ஆர் திருமண மஹால் ஆதனக்குறிச்சி இரவு 07.00 மணி செந்துறை தெற்கு ஞானாம்பாள் திருமண மஹால் செந்துறை

29.08.2024 வியாழன் கிழமை காலை 09.00 மணி திருமானூர் கிழக்கு-எஸ்.ஆர்.எம் திருமண மஹால் திருமானூர் பகல் 11.00 மணி திருமானூர் மேற்கு ஆர்.எஸ் மஹால் கீழப்பழூர் பகல் 12.00 மணி அரியலூர் நகரம் ST.மேரிஸ் மஹால் அரியலூர் மாலை 04.00 மணி தா.பழூர் மேற்கு சூர்யா மஹால், விக்கிரமங்கலம் மாலை 05.00 மணி அரியலூர் தெற்கு அரியதங்கம் திருமண மஹால் சுண்டக்குடி இரவு 07.00 மணி அரியலூர் வடக்கு லால்குடியார் மண்டபம், கல்லங்குறிச்சி, ஒன்றியம் / நகரம் இடம் 01.10.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணி ஆண்டிமடம் தெற்கு சுவாதி மஹால், காட்டாத்தூர் பகல் 11.00 மணி ஆண்டிமடம் வடக்கு வன்னியர் மஹால், ஆண்டிமடம் பகல் 12.00 மணி ஜெயங்கொண்டம் வடக்கு கே.டி.வி மஹால், ஜெயங்கொண்டம் மாலை 04.00 மணி ஜெயங்கொண்டம் நகரம் கே.டி.வி மஹால், ஜெயங்கொண்டம் மாலை 05.00 மணி ஜெயங்கொண்டம் தெற்கு நல்லையா மஹால், மீன்சுருட்டி இரவு 07.00 மணி தா.பழூர் கிழக்கு கேசவன் மஹால், தா.பழூர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்புரை!

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகசெயற்குழுக்கூட்டம்!

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

நாமக்கல், ஆக.28-

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் குறித்து

நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும்,

பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினரும்,

நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு சங்க தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் நாளை (29.08.2024-வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு நாமக்கல் மோகனூர் சாலை, முல்லை நகரில் உள்ள நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இனமான பேராசிரியர் அரங்கத்தில் நடைபெற உள்ளது.

மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன் தலைமையில், வனத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழக துணை செயலாளருமான கே.பொன்னுசாமி, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில், நடைபெறுகிறது .

இக்கூட்டத்திற்கு முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர், சிறப்பு அழைப்பாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: கழக முப்பெரும் விழா குறித்து. கழக பொது உறுப்பினர் கூட்டம் குறித்து. கிளை மற்றும் வார்டு கழகங்கள் வாரியாக ஆய்வு கூட்டம் நடத்துவது குறித்து. "தலைவர் கலைஞர் கல்வி உதவித்தொகை திட்டம்" விண்ணப்பம் வழங்குதல்.கழக ஆக்கப் பணிகள் குறித்து.

நாகை மாவட்டம் கீழையூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் திருப்பூண்டியில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் பேசினார். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ், மாவட்ட பிரதிநிதிகள் மு.ப.ஞானசேகரன், இராம.இளம்பரிதி, ஒன்றிய அவைத்தலைவர் சுப்பரமணியன், பொருளாளர் ஆர்.ஜி.முருகு, மாவட்ட ஊராட்சி குழு துணைத்தலைவர் கௌசல்யாஇளம்பரி மற்றும் பலர் உள்ளனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை

கிருஷ்ணகிரி, ஆக. 28-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே. மதியழகன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், முதலமைச்சருமான தளபதியார் அவர்களின் ஆணைப்படி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (29.08.2024-வியாழக்கிழமை) காலை 11 மணிக்கு கிருஷ்ணகிரி ஸ்ரீ தேவராஜ் மஹால் திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் டி.ஏ.நாகராஜ் தலைமையில் நடைபெற உள்ளது. இந்த பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தமிழ்நாடு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி மற்றும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்ற உள்ளனர்.

இந்த பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக மூத்த முன்னோடிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட ஊராட்சி குழு ஒன்றிய குழு, நகராட்சி, பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர், கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கிளை கழக செயலாளர்கள், வட்ட செயலாளர், வட்ட பிரதிநிதிகள், வாக்குச்சாவடி முகவர்கள், BLA 2, BLC உள்ளிட்ட அனைவரும் தவறாமல் இந்த பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

திருவாரூரில் இளைஞர் அணி சார்பில் பேச்சுப் போட்டி!

திருவாரூர்,ஆக28.

திருவாரூர் மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் மாவட்ட திமுக, மாவட்ட அமைப்பாளர் பனங்குடி ஏ.எஸ். குமார் மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஏற்பாட்டில், திருவாரூர் காட்டூரில் அமைந்துள்ள கலைஞர் கோட்டத்தில் "உயிரினும் மேலான" என்கின்ற பேச்சுப்போட்டி நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமை ஏற்று போட்டியை துவக்கி வைத்தார்.

தலைமை கழகத்தின் சார்பில் திமுக கொள்கை பரப்பு செயலாளர் முனைவர் சபாபதி மோகன், குமரி பிரபாகரன் , பன்னீர் பெருமாள், மதுரை பாலா, சைதை சாதிக், ச.அ.பெருநற்கிள்ளி ஆகியோர் போட்டிக்கு நடுவர்களாக பொறுப்பேற்று நடத்தினர்.

மாநில இளைஞரணி துணை செயலாளர் சி.ஆனந்த்குமார் , மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் பனங்குடி ஏ.எஸ். குமார் , சி.கே. எஸ்.எழிலரசன் ,வி.கே.முருகானந்தம், எஸ்.கல்யாணசுந்தரம், எம்.பி. எடிசன், பி.தாகிர் அலி, வி.வினோத்குமார், மற்றும் மாவட்ட ஊராட்சி பெருந் தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு, துணைத்தலைவர் சேகர் என்கிற கலியபெருமாள், ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், பால.ஞானவேல், நகர செயலாளர்கள் எஸ்.பிரகாஷ் , எஸ்.வி. பக்கிரிசாமி , பூண்டி.கே. கலைவேந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

போட்டியில் அதிக அளவில் பெண்கள் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. பங்கேற்று இறுதிப்போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்ட 20 பேருக்கு மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் தலா 10 ஆயிரம் வீதம் 2 லட்சம் ரூபாயை ஊக்கப் பரிசாக வழங்கினர். பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இந்தப் போட்டியில் வி.ஆர்.என்.பன்னீர், பா. அரவிந்த், காட்டூர் விமலா பிரபாகரன், திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட ஆண், மற்றும் பெண் போட்டியாளர்கள் பங்கேற்று பேசினர்.

திருவாரூர் கலைஞர் கோட்டத்தில் நடைபெற்ற' உயிரினும் மேலான ' பேச்சுப்போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 பேருக்கு தலா வீதம் 10000ரூபாய் பரிசுத் தொகையினையும், பங்கேற்ற அனைவருக்கும் பரிசு மற்றும் சான்றிதழையும் மாவட்டச் செயலாளர் பூண்டிகே.கலைவாணன் எம்.எல்.ஏ. வழங்கினார். மாநில இளைஞரணி துணை செயலாளர் சி.ஆனந்த்குமார், மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, துணைத் தலைவர் சேகர் கலியபெருமாள், கழக கொள்கை பரப்பு செயலாளர் முனைவர் சபாபதி மோகன், தலைமைக் கழக பேச்சாளர்கள் குமரி பிரபாகரன், பன்னீர் பெருமாள், மதுரை பாலா, சைதை சாதிக், ச.அ. பெருநற்கிள்ளி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் பனங்குடி ஏ.எஸ்.குமார் , துணை அமைப்பா ளர்கள் சி.கே.எஸ். எழிலரசன், வி.கே.முருகானந்தம், எஸ்.கல்யாணசுந்தரம், எம்.பி. எடிசன், பி.தாகிர் அலி, வி.வினோத்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம்

திண்டிவனம் தொகுதியில் செயல்வீரர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் டாக்டர் ப.சேகர் அறிவிப்பு!

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் தொகுதியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் கலந்து கொள்ளும் செயல்வீரர்கள் கூட்ட நிகழ்ச்சி வருமாறு:

வ. எண்	நாள்	நேரம்	ஒன்றியம்	இடம்	கூட்ட ஏற்பாடு
1	01.09.2024	காலை 10.00 மணி	மரக்காணம் பேரூர்	மரக்காணம் M.J.R திருமண மண்டபம்	திரு.A.ரவிக்குமார் மரக்காணம் பேரூர் கழக செயலாளர்
2	01.09.2024	பகல் 12.00 மணி	மரக்காணம் கிழக்கு	மரக்காணம் M.J.R திருமண மண்டபம்	திரு.R.தயாளன் மரக்காணம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர்
3	01.09.2024	மாலை 5.00 மணி	மரக்காணம் மத்தியம்	சிறுவாடி A.M.S திருமண மண்டபம்	திரு.V.ரவிச்சந்திரன் மரக்காணம் மத்திய ஒன்றிய கழக செயலாளர்
4	02.09.2024	காலை 10.00 மணி	ஒலக்கூர் கிழக்கு	பாங்கொளத்தூர் பச்சைவாழியம்மன் கோவில் திருமண மண்டபம்	திரு.G.சொக்கலிங்கம் ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர்
5	02.09.2024	மாலை 4.00 மணி	மரக்காணம் மேற்கு	ஓமந்தூர் பிரவாஸ் பேலஸ்	திரு.A.பழனி மரக்காணம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர்
6	05.09.2024	மாலை 4.00 மணி	திண்டிவனம் நகரம்	திண்டிவனம் ஆரியாஸ் மினி மஹால்	ஆசிரியர் திரு.M.கண்ணன் திண்டிவனம் நகர செயலாளர்

மேற்கண்ட அனைத்து செயல்வீரர்கள் கூட்டங்களிலும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார். கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. கழக முப்பெரும் விழா, 2. கழக ஆக்கப் பணிகள்

டாக்டர் ப.சேகர்
மாவட்டப் பொறுப்பாளர்
விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அன்பில் பொய்யாமொழி

ஆகஸ்ட் 28 (1999)



திராவிட இயக்க முன்னணித் தலைவர்களில் ஒருவரான அன்பில் தர்மலிங்கம் அவர்களின் புதல்வர்.

தி.மு.க. இளைஞர் அணி தொடங்கப்பட்ட நாளிலிருந்தே அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தவர்.

1989–91 மற்றும் 1996–99ஆம் ஆண்டுகளில் சட்டப் பேரவை உறுப்பினராகப் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.